05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# பிசிராந்தையார் நாடகத்தில் வரும் கதைப்பின்னலின் கற்றல் கற்பித்தலை Multimodal வழி மேம்படுத்துதல்

# MENINGKATKAN KEMAHIRAN PENGAJARAN DAN PEMBELAJARAN JALAN CERITA DALAM "DRAMA PISIRANTHAIYAAR" MELALUI MULTIMODAL PEMBELAJARAN.

துர்கா ஸ்ரீ த/பெ கண்ணப்பன்

DHURGAASHRE A/P M.KANAPPAN

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

விரிவுரையாளர் பெயர் :

முனைவர் கிங்ஸ்டன் பால்தம்புராஜ்

DR. KINGSTON PALTHAMBURAJ

சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2024/2025

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

**படைப்புரிமை உறுதிமொழி – PERAKUAN KEASLIAN PENULISAN**

இந்த உறுதிமொழி ____ /____ / 2024 அன்று வழங்கப்பபட்டது. Perakuan ini telah dibuat pada seperti tarikh di atas.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

I. மாணவர் உறுதிமொழி (Perakuan Pelajar)

தமிழ்மொழிக் கல்வியியல் இளங்கலைப் பட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பிசிராந்தையார் நாடகத்தில் வரும் கதைப்பின்னலின் கற்றல் கற்பித்தலை 'Multimodal' வழி மேம்படுத்துதல் எனும் தலைப்பிலான இந்த ஆய்வேடு என்னுடைய சுயமுயற்சியால் உருவாக்கப்பட்டது என மொழி தொடர்புப் புலத்தின் மாணவியாகிய நான், துர்கா ஸ்ரீ த/பெ கண்ணப்பன் (D20211100690) உறுதிமொழி வழங்குகிறேன். இந்த ஆய்வில், பதிப்புரிமையுடைய படைப்புகள் யாவும் அனுமதி பெறப்பட்டு, அவற்றின் மூலங்களைக் குறிப்பிட்டதோடு, துணைபுரிந்த அனைத்து மேற்கொள்களும் துணைநூற்பட்டியலில் முறையாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



Saya, **DHURGAASHRE A/P M.KANAPPAN (D20211100690)** FAKULTI BAHASA DAN KOMUNIKASI dengan ini mengaku bahawa projek penyelidikan yang bertajuk **MENINGKATKAN KEMAHIRAN PENGAJARAN DAN PEMBELAJARAN JALAN CERITA DALAM "DRAMA PISIRANTHAIYAAR" MELALUI MULTIMODAL PEMBELAJARAN** adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa – apa penggunaan mana -mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan atau kepada mana – mana hasil yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya.

**TANDATANGAN :**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

DHURGAASHRE A/P M.KANAPPAN

D20211100690

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## II. நெறியாளர் உறுதிமொழி

பிசிராந்தையார் நாடகத்தில் வரும் கதைப்பின்னலின் கற்றல் கற்பித்தலை 'Multimodal' வழி மேம்படுத்துதல் என்ற தலைப்பிலான இந்த ஆய்வேடு துர்கா ஸ்ரீ த/பெ கண்ணப்பன் (D20211100690) என்ற மாணவியின் சுய முயற்சியால் உருவாக்கப்பட்டது என ஆய்வு நெறியாளராகிய நான், முனைவர் கிங்க்ஸ்டன் பால் தம்புராஜ் உறுதிமொழி வழங்குகிறேன். இந்த ஆய்வேடு நெறியாளராகிய நான், கல்வியியல் இளங்கலைப் பட்டத்தைப் பெறுவதற்காக மொழி தொடர்பியல் புலத்திடம் சமர்பிக்கப்பட்டது.

Saya, DR KINGSTON PALTHAMBURAJ dengan mengesahkan bahawa hasil kerja pelajar yang bertajuk **MENINGKATKAN KEMAHIRAN PENGAJARAN DAN PEMBELAJARAN JALAN CERITA DALAM "DRAMA PISIRANTHAIYAAR" MELALUI MULTIMODAL PEMBELAJARAN** dihasilkan oleh pelajar seperti nama di atas, dan telah diserahkan kepada FAKULTI BAHASA DAN KOMUNIKASI bagi memenuhi sebahagian syarat untuk memperoleh IJAZAH SARJANA MUDA PENDIDIKAN (BAHASA TAMIL) DENGAN KEPUJIAN.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**TANDATANGAN :**

______________________________

**DR KINGSTON PAL THAMBURAJ**

**PENYELIA,**

**FAKULTI BAHASA DAN KOMUNIKASI**

**UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS.**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



# நன்றியுரை

இந்த ஆய்வினை எந்தவொரு தங்குதடையின்றிச் சிறப்புடன் செய்து முடிக்க எனக்கு உதவி புரிந்த இறைவனுக்கு நன்றி செலுத்திறேன். இந்த ஆய்வை மேற்கொள்வதற்கு அனுமதி கொடுத்த சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கழைக்கழகத் தமிழ்மொழிப் பிரிவுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் பின், இந்த ஆய்வை முழுமையாக முடிக்க எனக்கு நல்லதொரு வழிகாட்டியாக இருந்த முனைவர் கிங்க்ஸ்டன் பால் தம்புராஜ் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்து நேரங்களிலும் எனக்கு ஊக்கும் கொடுத்த இறுதிவரை துணையாக நின்ற என் பெற்றோர்களுக்கும், என் நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆய்வை நல்ல முறையில் மேற்கொள்வதற்கு இறுதிவரை எனக்கு உதவி புரிந்த ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



# பிசிராந்தையார் நாடகத்தில் வரும் கதைப்பின்னலின் கற்றல் கற்பித்தலை 'Multimodal' வழி மேம்படுத்துதல்

## ஆய்வுச் சுருக்கம்

இந்த ஆய்வு பிசிராந்தையார் நாடகத்தில் வரும் கதைப்பின்னலின் கற்றல் கற்பித்தலை 'Multimodal' வழி மேம்படுத்துதல் எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வு நான்காம் படிவ மாணவர்களிடம் நடத்தப்பட்டது. இந்த ஆய்வு இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டது. முதல் நோக்கம் பிசிராந்தையார் நாடகத்தின் கதைப்பின்னலைக் கற்பிப்பதில் மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கண்டறிதல். இரண்டாவது நோக்கம் பிசிராந்தையார் நாடகத்தின் கதைப்பின்னல் கற்பித்தலை 'Multimodal' அணுகுமுறை வழி மேம்படுத்துதல். இந்த ஆய்விற்கு ஆய்வாளர் 'ஏடி மோடல்' கோட்பாட்டைப் பயன்படுத்தினார். இந்த ஆய்வு பேராக் மாநிலத்திலுள்ள இடைநிலைப்பள்ளியான ஊத்தான் மெலிந்தாங் பள்ளியில் நடத்தப்பட்டன தரவுகைச் சேகரிக்க முன்னறிவுத் தேர்வு மற்றும் பின்னறித் தேர்வு, மதிப்பீட்டு ஆவணங்கள் மற்றும் கவனிப்பு, நேர்க்காணல், உற்று நோக்குதல் ஆகியவற்றை கருவிகளாகப் பயன்படுத்தி தரவு சேகரிப்பு நடத்தப்பட்டது. முன்னறித் தேர்வுக்குப் பிறகு ஆய்வாளர் மூன்று நடவடிக்கையை 'மைல்டிமோடல்' பயன்படுத்தி நடத்தினார். அவை ஆய்வாளர் பிசிராந்தையார் நாடகத்தின் கதைப்பின்னல் சார்ந்த நகர்படக் காட்சி காணொளியை உருவாக்கப்பட்டன, பிசிராந்தையார் நாடகத்தின் கதைப்பின்னல் சார்ந்த ஒலிப்பதிவு ஒன்றை உருவாக்கப்பட்டன, மின்னட்டை விளையாட்டு ஒன்றை உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு நடவடிக்கைக்குப் பின் எழுத்துப்பணி கொடுத்து, மாணவர்களை மதிப்பீடுச் செய்தார். இந்த மூன்று நடவடிக்கையும் நடத்தியப் பின் பின்னறித் தாளைக் கொடுத்து மதிப்பீடுச் செய்தார். இறுதியாக 'மைல்டிமோடல்' வழி ஆய்வாளர் மாணவர்களிடையே பிசிராந்தையார் நாடகத்தில் வரும் கதைப்பின்னலின் கற்றல் கற்பித்தல் புரிதலை மேம்படுத்தியுள்ளார் என்பதை பின்னறித் தேர்வின் முடிவின் போது தெரியப்பட்டது. இந்த அணுகுமுறை இடைநிலைப் பள்ளி மாணவர்களின் நாடகத்தைக் கற்றுக்கொள்வதிலும் கற்பிப்பதிலும் ஆர்வத்தை அதிகரிக்கிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



**MENINGKATKAN KEMAHIRAN PENGAJARAN DAN PEMBELAJARAN JALAN CERITA DALAM "DRAMA PISIRANTHAIYAAR" MELALUI MULTIMODAL PEMBELAJARAN.**

## ABSTRAK

Kajian ini meningkatkan kemahiran pengajaran dan pembelajaran jalan cerita dalam "Drama Pisiranthaiyaar" melalui multimodal pembelajaran. Kajian ini dijalankan dengan pelajar tingkatan empat. Kajian ini dijalankan berdasarkan dua objektif. Objektif pertama adalah untuk mengenal pasti masalah yang dihadapi oleh pelajar dalam pembelajaran jalan cerita "Drama Pisiranthaiyaar". Objektif kedua ialah untuk menambah baik pengajaran jalan cerita "Drama Pisiranthaiyaar" melalui Multimodal pembelajaran. Pengkaji menggunakan teori 'ADDIE MODAL' untuk kajian ini. Kajian ini dijalankan di Sekolah Menengah Kebangsaan Hutan Melintang, Perak. Proses pengumpulan data telah dijalankan menggunakan ujian pra dan ujian pasca, dokumen pentaksiran, pemerhatian dan temu bual. Selepas praujian, pengkaji telah menjalankan tiga aktiviti berdasarkan Multimodal pembelajaran. Aktiviti menonton video (Visual) cartoon jalan cerita "Drama Pisiranthaiyaar", aktiviti mendengar audio jalan cerita "Drama Pisiranthaiyaar" dan memain kad permainan (Kinesthetic). Setiap aktiviti permainan ada menjalankan ujian untuk mengenal pasti tahap kefahaman pelajar. Selepas, menyelesaikan ketiga – tiga aktiviti pengkaji telah menjalankan ujian pasca. Pada akhir ujian pasca, didapati kaedah analisis, Multimodal pembelajaran telah meningkatkan pemahaman pelajar tentang jalan cerita dalam "Drama Pisiranthayaar". Multimodal pembelajaran telah meningkatkan minat pelajar sekolah menengah dalam pembelajaran dan pengajaran.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| இயல் 1<br>1.0 முன்னுரை | 1 - 4 |
| 1.1ஆய்வுப் பிண்ணனி | 4 - 7 |
| 1.2 ஆய்வுச் சிக்கல் | 7 - 8 |
| 1.3 ஆய்வு நோக்கம் | 8 |
| 1.4 ஆய்வு வினா | 8 |
| 1.5 ஆய்வு நன்மைகள்<br>1.5.1 மாணவர்கள்<br>1.5.2 ஆசிரியர்கள் | 9 - 10 |
| 1.6 ஆய்வு எல்லை | 10 - 11 |
| 1.7 ஆய்வு சான்றாதாரம்<br>1.7.1 முதன்மைச் சான்றாதாரம்<br>1.7.2 துணைச் சான்றாதாரம் | 11 - 12 |
| 1.8 கலைச்சொற்கள் விளக்கம்<br>1.8.1 நாடகக் கதைப்பின்னல்<br>1.8.2 'Multimodal' அணுகுமுறை (MULTIMODAL METHOD LEARNING)<br>1.8.3 பிசிராந்தையார் நாடகம்<br>1.8.4 ADDIE கோட்பாடு | 12 - 16 |
| 1.9 தொகுப்புரை | 16 -17 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi




| | |
|---|---|
| இயல் 2<br>2.0 முன்னுரை | 18 |
| 2.1 ADDIE கோட்பாடு கட்டமைப்பின் விவாதம் | 18 - 24 |
| 2.2 MULTIMODAL அணுகுமுறையைப் பயன்படுத்தி நாடக இலக்கியத்தைக் கற்பித்தல் (ஆய்வுக் கட்டுரைகள்). | 25 - 27 |
| 2.3 MULTIMODAL அணுகுமுறையைப் பயன்படுத்தி இலக்கியத்தைக் கற்பித்தல் (ஆய்வுக் கட்டுரைகள்). | 27 - 29 |
| 2.4 MULTIMODAL அணுகுமுறையை பாடத்திற்குக் கற்றல் கற்பித்தலுக்குப் பயன்படுத்துதல் (ஆய்வுக் கட்டுரைகள்)<br>2. 4.1 கட்டுரைகள்<br>2.4.2 புத்தகம் | 30 - 37 |
| 2.5 நாடகம் கற்பிக்கும் முறைமை | 37 - 39 |
| 2.6 தொகுப்புரை | 40 |
| இயல் 3<br>3.0 முன்னுரை | 41 |
| 3.1 ஆய்வு வடிவமைப்பு | 41 - 42 |
| 3.2 ஆய்வு கட்டமைப்பு | 43 -44 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



| | |
|---|---|
| 3..3 ஆய்வு அணுகுமுறை | 44 - 45 |
| 3.4 ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோர் | 45 - 47 |
| 3.5 ஆய்வு கருவி<br>3.5.1 முன்னறித் தாள் மற்றும் பின்னறித் தாள்<br>3.5.2 மதிப்பீட்டுப் புள்ளிவிவரம்<br>3.5.3 நேர்க்காணல் வினாத்தொகுதி | 47 - 51 |
| 3.6 தரவு சேகரிப்பு முறை<br>3.6.1 ஆய்வு கால வரையறை | 51 -53 |
| 3.7 தரவுப் பகுப்பாய்வு | 54 |
| 3.8 ஆய்வுக் கோட்பாடு | 55 - 58 |
| 3.9 கோட்பாட்டின் வடிவமைப்பு | 59 |
| 3.10 தொகுப்புரை | 60 |
| இயல் 4<br>4.0 முன்னுரை | 61 |
| 4.1 ஆய்வு நோக்கத்தின் சிக்கலைக் கண்டறியப் பயன்படுத்தியத் தரவுகள் | 62 |
| 4.2 நோக்கம் 1 : மாணவர்கள் பிசிராந்தையார் நாடகத்தின் கதைப்பின்னலைக் கற்பிப்பதில் மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கண்டறிதல். | 63 - 65 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



| | |
|---|---|
| 4.3 நடவடிக்கை<br>4.3.1 Analyze (பகுப்பாய்வு)<br>4.3.2 Design (வடிவமைப்பு)<br>*4.3..3 Develop* (உருவாக்கம்)<br>4.3.4 Implement (செயல்படுத்துதல்)<br>4.3.5 Evaluate (மதிப்பீடு) | 65 - 68 |
| 4.4 பகுப்பாய்வு முடிவுகள்<br>நோக்கம் 2 : பிசிராந்தையார் நாடகத்தின் கதைப்பின்னல் கற்பித்தலை 'Multimodal ' அணுகுமுறை வழி மேம்படுத்துதல். | 68 - 77 |
| 4.5 முன்னறித் தேர்வு முடிவுகளும் பின்னறித் தேர்வு முடிவுகளும் ஒப்பிடு | 78 - 82 |
| 4.6 தொகுப்புரை | 83 |
| இயல் 5<br>5.0 முன்னுரை | 84 |
| 5.1 ஆய்வு முடிவுகளின் சுருக்கமும் ஆய்வுக் கலந்துடையாடலும்<br>5.1.1 நான்காம் படிவ மாணவர்கள் பிசிராந்தையார் நாடகத்தின் கதைப்பின்னலை கற்பிப்பதில் எவ்வாறான சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர் என்பதை அறியுதல். | 84 - 86 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi




| | |
|---|---|
| 5.1.2 பிசிராந்தையார் நாடகத்தின் கதைப்பின்னல் கற்பித்தலை 'Multimodal ' அணுகுமுறை வழி மேம்படுத்துதல். | |
| 5.2 தொடர் ஆய்விற்கான பரிந்துரைகள் | 87 - 88 |
| 5.3 தொகுப்புரை | 88 |
| துணைநூற்பட்டியல் | 89 - 95 |
| பிண்ணிப்பு<br>முன்னறி தேர்வு<br>நடவடிக்கை 1 : பயிற்சி<br>நடவடிக்கை 2 : பயிற்சி<br>பின்னறிவு தேர்வு<br>முன்னறித் தேர்வு முடிவுகள்<br>கருத்தறி வினா நிரல்<br>நகர்படக் காட்சி<br>ஆடியோ<br>மின்னட்டை விளையாட்டு | 96 - 106 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**பிசிராந்தையார் நாடகத்தில் வரும் கதைப்பின்னலின் கற்றல் கற்பித்தலை**

**Multimodal வழி மேம்படுத்துதல்**

# இயல் 1

## ஆய்வு அறிமுகம்

### 1.0 முன்னுரை

தமிழ் இலக்கியம் பண்டையத் தமிழ் மக்களின் வாழ்க்கை, மதிப்புகள் மற்றும் நம்பிக்கைகள் பற்றிய நுண்ணறிவுகளை வழங்கும் வரலாற்று அறிவின் கலை. இது அவர்களின் சமூகக் கட்டமைப்புகள், அரசியல் அமைப்புகள் மற்றும் கலாச்சார நடைமுறைகள் பற்றிய ஒரு பார்வையையாகவும் வழங்குகிறது. இலக்கியம் ஒரு சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகச் செயல்படுகிறது. அவற்றுள் நாடக இலக்கியம் என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இந்தப் பண்டைய இலக்கியத்தின் உள்ளே தான் நாடகமும் இடம்பெறுகிறது. நாடகம் என்பது கற்பனையான கதாபாத்திரங்கள் மற்றும் நிகழ்வுகளைப் பற்றிய கதையைச் சொல்லுவதற்காக எழுதப்பட்டப் புனைகதைகளின் நீண்டப் படைப்பாகும். நாடகங்கள் பொதுவாகச் சிக்கலான



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கருப்பொருள்களை ஆராய்ந்து கதையின் போக்கில் பாத்திரங்களை உருவாக்குகின்றன. இந்த நாடக இலக்கியத்தில் பல பிரிவுகள் பிரிகின்றன.

மேலும், நாடகம் என்பது நாடு + அகம் = நாடகம் என்ற சொல் விளக்கத்தை அளிக்கிறது. நாடு என்பது வெளிப்புற உலகத்தையும், அகம் என்பது மனித அக உலகத்தையும் குறிக்கிறது. நாடகம் என்பது இவ்விரண்டையும் இணைத்து, மனித வாழ்வின் பல்வேறு உணர்ச்சிகளையும், சிந்தனைகளையும் வெளிப்படுத்தும் ஒரு கலை வடிவம் ஆகும். உள்ளம் பார்க்குமாறு ஆடலும் பாடலும் கொண்டு விளங்குவது நாடகம். நடிகர்களின் நடிப்பு, பாடகர்களின் பாடல், இசை, ஒளி, வண்ணங்கள் போன்றவை இணைந்து, பார்வையாளர்களின் உள்ளத்தை கவர்ந்து, அவர்களைக் கதையோடு கதையோடு வைக்கும் ஆற்றல் நாடகத்திற்கு உண்டு. நாளடைவில் இந்த நாடகக் கலையைப் புத்தகமாக எழுதத் தொடங்கினர். மக்கள் அனைவரும் நாடகப் புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினர். [20]

இந்த நாடகங்களில் நிறைய கதாபாத்திரங்களைக் கொண்டு வருவது உண்டு. அவை முதன்மை கதாபாத்திரங்கள் என்பது கதையின் முக்கிய நிகழ்வுகளில் ஈடுபட்டு, அதன் தீர்மானத்தில் முக்கியப் பங்கு வகிக்கும் கதாபாத்திரங்கள், துணை கதாபாத்திரங்கள் என்பது முதன்மை கதாபாத்திரங்களை ஆதரிக்கவும், கதையை வளர்க்கவும் உதவும் கதாபாத்திரங்கள். சிறிய கதாபாத்திரங்கள் கதையில் குறைந்த அளவிலான பங்கைக் கொண்டதாக அமையும். நாயகர்கள் எல்லாம் நல்லவர்கள் மற்றும் நாடகத்தின் நேர்மறையான இலக்குகளை அடைய முயற்சிப்பவர்களாக இருப்பர். தீயவர்கள் எல்லாம்



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கதாநாயகர்களுக்கு எதிராகச் செயல்படும் மற்றும் எதிர்மறையான இலக்குகளை அடைய முயற்சிக்கும் கதாபாத்திரங்கள். நடுநிலை கதாபாத்திரங்கள் என்பது நல்ல அல்லது தீய எந்த பக்கத்திலும் உறுதியாக இல்லாத கதாபாத்திரங்கள். [21]

மலேசியா கல்வி திட்டம் 2018 ஆம் ஆண்டு இலக்கியப் பாடத்திட்டத்திற்காக தர அடிப்படையிலான பாடத்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தைப் புதிதாக உருவாக்கியது. இதில் கவிதை, நாவல், நாடகம் எனும் மூன்று அடிப்படையையும் மதிப்பீட்டு ஆவணத்தை உருவாக்கினர். இதனைத் துணைக்கொண்டுதான் ஆசிரியர்கள் பள்ளியில் மாணவர்களுக்கு இலக்கியப் பாடத்தைக் கற்றல் கற்பித்தலுக்குப் பயன்படுத்துவர். [10]

இலக்கிய நாடகத்தை மாணவர்களிடத்தில் கொண்டு சேர்ப்பதன் காரணம் என்னவென்றால் நாடகங்கள் மாணவர்களை கற்பனை உலகில் மூழ்கவும், புதிய யோசனைகளை ஆராயவும், தங்களை வெவ்வேறு கதாபாத்திரங்களின் இடத்தில் வைத்து பார்க்கவும் அனுமதிக்கின்றன. இது அவர்களின் படைப்பாற்றல் திறன்களை வளர்க்கவும், புதிய வழிகளில் சிந்திக்கவும் உதவுகிறது. நாடகங்கள் மாணவர்களுக்கு வாய்வழி மற்றும் எழுத்து மொழி திறன்களை மேம்படுத்த ஒரு சிறந்த வழியாகும். நாடகங்களைப் படிப்பதன் மூலம், அவர்கள் புதியச் சொற்களஞ்சியத்தைக் கற்றுக்கொள்ளலாம், சரளமாகப் பேச கற்றுக்கொள்ளலாம் மற்றும் திறம்பட எழுத கற்றுக்கொள்ளலாம்.

மேலும், நாடகங்களை ஆராய்வதன் மூலம், அவர்கள் உலகத்தைப் பற்றிய புதிய புரிதல்களைப் பெறலாம் மற்றும் பல்வேறு கண்ணோட்டங்களைப் பற்றி அனுதாபத்துடன் சிந்திக்க மாணவர்களால்



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இயலும். மாணவர்கள் நாடகத்தைப் படிப்பதால் அவர்களுக்கு விமர்சன சிந்தனைத் திறன்கள் வளரும். நாடகக் கதைகளை பகுப்பாய்வு செய்யவும், கருத்துக்களை உருவாக்கவும், தகவல்களை மதிப்பீடு செய்யவும் வாய்ப்புகளை வழங்குகின்றன. நாடகங்களைப் பற்றி விவாதிப்பதன் மூலம், அவர்கள் தங்கள் சொந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தவும், ஆதாரங்களை வைத்து வாதிடவும், பல்வேறு பார்வைகளை மதிக்கவும் கற்றுக்கொள்ளுகின்றனர்.

இந்தப் பாடத்திட்டத்தின் கற்றல் தரத்தின் துணைக்கொண்டு பிசிராந்தையார் நாடகத்தின் கதைப்பின்னல் எனும் தலைப்பைதான் ஆய்வாளர் எடுத்துள்ளார். இந்த ஆய்வானது தமிழ் இலக்கியப் பாடத்தின் ஒரு பிரிவான நாடக்கத்தின் கதைப்பின்னலை 'Multimodal' வழி மாணவர்களுக்கு கற்றல் கற்பித்தலை மேம்படுத்துதல் எனும் முழுமையான தலைப்பில் அமைந்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.1 ஆய்வுப் பிண்ணனி

மாணவர்களுக்கு நாடகத்தைக் கற்பிப்பதால் நிறைய நன்மைகள் அடைகின்றனர். நாடகக் கதைப்பின்னல் என்பது ஒரு முழுமையான கதையைச் சுலபமாக மாணவர்களுக்குப் புரிய வைப்பதற்குத் துணைப் புரிகிறது. நாடகக் கதைப்பின்னல் கற்பித்தல் மாணவர்களைக் கற்றல் செயல்முறையில் ஈடுபடுத்த உதவுகிறது. நாடகக் கதைப்பின்னலை மாணவர்கள் நன்கு உய்த்துணர்ந்துப் படிக்கும் போது, மாணவர்களுக்கு ஈர்க்கக்கூடியதாகவும் இருக்கிறது. இதன் வழி மாணவர்கள் கவனம் செலுத்தவும், பிசிராந்தையார் நாடகத்தை நன்கு கற்றுக்கொள்ளவும் அதிக வாய்ப்புகள் உள்ளன.



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கதைப்பின்னல் கற்றல் கற்பித்தல் சிக்கலான கருத்துக்களை புரிந்துகொள்ள மாணவர்களுக்கு உதவுகிறது. கதைகள் கருத்துக்களை நிஜ உலக சூழல்களில் வழங்குகின்றன, இது மாணவர்களுக்கு அந்தக் கருத்துக்களைத் தேர்வின் போது இணைக்க எளிதாக உதவுகிறது. மேலும், கதைப்பின்னல் கற்பித்தல் மாணவர்களின் விமர்சன சிந்தனைத் திறன்களை மேம்படுத்த உதவுகிறது. கதைகளை மாணவர்கள் வெவ்வேறு கோணங்களில் இருந்து சிக்கல்களைப் பற்றிச் சிந்திக்கவும், தங்கள் சொந்த கருத்துக்களை உருவாக்கவும் ஊக்குவிக்கின்றன. கதைப்பின்னலைப் பற்றி மாணவர்கள் வாசிப்பு பல்வேறு எழுத்து வடிவங்களைப் புரிந்துகொள்ளவும் கற்றுக்கொள்ளவும் உதவுவதன் மூலம் எழுதும் திறனை மேம்படுத்துகிறது.

அவ்வகையில் கதைப்பின்னலை மாணவர்கள் நாடகக் கதைப்பினலைத் தெரிந்து கொள்ளும் போது ஒரு முழுமையானக் கதையை நினைவுகூர்ந்து எழுதுவதற்கு தூண்டுகோலாக இருக்கிறது. மாணவர்கள் வெவ்வேறு கதாபாத்திரங்கள், அமைப்புகள், சதிகள், திருப்பங்கள் மற்றும் இணைப்புகளை நினைவில் வைத்திருக்க வேண்டுமானால் இந்த கதைப்பின்னல் முக்கியம் அளிக்கிறது. இது மாணவர்களின் நினைவாற்றலையும், அறிவையும் பலப்படுத்தும். ஏனெனில் மாணவர்களின் கவனமெல்லாம் கதையில் குவிந்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இந்த நாடகக் கதைப்பின்னலைக் கற்றுக் கொடுப்பதற்கு, ஆய்வாளர் ‘ADDIE MODAL’ கோட்பாட்டைப் பயன்படுத்தியுள்ளார். இந்தக் கோட்பாட்டைப் பயன்படுத்துவதன் வழி கற்றல் கற்பித்தல் செயல்முறையை ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் அணுக உதவுகிறது. பல்வேறு கற்பித்தல்



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

முறைகள் மற்றும் ஊடகங்களைப் பயன்படுத்த ஊக்குவிக்கிறது. இதில் மொத்தம் ஐந்து பிரிவுகள் உள்ளன. ஆய்வு (Analyze), திட்டமிடல் (Design), உருவாக்குதல் (Development), செயல்படுத்துதல் (Implement), மதிப்பீடு (Evaluation). இந்த கோட்பாட்டின் வழியின் மூலம் இறுதி கட்டத்தில் கவனம் செலுத்த முடிந்தன. இந்த கற்றல் கற்பித்தலின் இறுதியில் மாணவர்களுக்குப் பயன்படுத்திய அணுகுமுறை மாணவர்களுக்கு உதவியதா என்பதை மதிப்பீடுச் செய்ய முடிந்தன. இந்த மதிப்பீட்டின் மூலம் பெறப்படும் தகவல்களின் வழி கற்பித்தல் முறையன சேர்ந்துள்ளது என்பது பின்னறித் தேர்வில் தெரிய வந்தன.

பின்பு, இந்த நாடகக் கதைப்பின்னலை 'MULTIMODAL' அணுகுமுறை வழி, கற்றல் கற்பித்தல் நடைபெறும். இவை நான்கு கூறுகள் உள்ளன. பார்த்தல் (VISUAL) , கேட்டல் (AUDITORY) , படித்தல்/எழுதுதல் (READING / WRITING) மற்றும் இயக்கவியல் (KINESTHETIC). இந்த 'MULTIMODAL' வழி மாணவர்களுக்குப் பிசிராந்தையார் நாடகக் கதைப்பின்னல் கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளும் போது இன்னும் ஆழமாகப் புரியும். மாணவர்கள் இந்த அணுகுமுறையின் வழி ஒரு பிசிராந்தையார் நாடகத்தின் கதைப்பின்னலைப் படிக்கும் போது ஆழமாகப் படிப்பதோடு, அதனைத் தொடர்ந்து நிறைய இயக்கவியலானப் பயிற்சிகளை மேற்கொண்டனர். மேலும், பிசிராந்தையார் நாடகக் கதைப்பின்னலை வாசிப்பதைத் தவிர்த்து; அந்தக் காட்சிகளை ஒருவர் கூறும் போது அவர்களின் ஆழ்மனதில் பதியும். மாணவர்கள் ஒரு பாடத்தை நீண்ட நேரம் படிப்பதைவிட அவை நகர்படக்



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

காட்சியைக் காண வைக்கும் போது, அவர்களுக்குள் கற்றல் கற்பித்தலின் அதிகத் தாக்கம் ஏற்படும் என்பதை Williams ஆய்வாளர் கூறியுள்ளார். [8]

**1.2 ஆய்வுச் சிக்கல்**

மலேசியா கல்வித் திட்டத்தில் நாடகத்திலும் நாவலிலும் கதைப்பின்னலை கற்பிப்படுவது பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் நாடகத்தின் கதைப்பின்னலைக் கற்பிப்பதில் சிக்கலை எதிர்நோக்குகின்றனர். இதன் காரணம் நாடகக் கதைப்பின்னலை ஒரு முழுமையானக் கதையோட்டத்துடன் தேர்வில் எழுதுவதற்கு சிரமம் அடைகின்றனர். அந்தக் கதையை தொடக்கம், வளர்ச்சி, உச்சம், சிக்கல், சிக்கல் அவிழ்ப்பு மற்றும் முடிவைச் சரிவர எழுதுவதற்குச் சிரமம் அடைகின்றனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும், மாணவர்கள் நாடகக் கதைப்பின்னலை புத்தகத்தின் வாயிலாகப் படிப்பதால் மட்டுமே, விரைவாக மறந்துவிடுகின்றனர். நாடகக் கதைப்பின்னலின் ஆறு கூறுகளை நினைவில் வைத்து வகுப்பில் கற்பிப்பதனைச் சரி; அதனை தேர்வில் எழுதும் போது தவறாக எழுதுவிடுகின்றனர். காரணம் அந்த ஆறு கூறுகளையும் நினைவில் வைத்துக் கொள்வதற்குச் சிரமத்தை எதிர்நோக்கினர்.

பின்பு, பிசிராந்தையார் நாடகத்தின் உள்ள அனைத்து பகுதிகளையும் மாணவர்கள் ஆர்வமின்றி காணப்பட்டனர். குறிப்பாக, பிசிராந்தையார் நாடகத்தின் உள்ள கதைப்பின்னல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காரணம் நாடகத்தைப் படிக்க வேண்டும் என்றாலே கஷ்டம் அடைகின்றனர்.



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நாடகத்தின் உள்ள வார்த்தைகள் எல்லாம் கடினமாக உள்ளதால் அதனை ஆர்வமின்றி மாணவர்கள் கற்றனர்.

ஆகையினால், இந்த Multimodal – யைப் பயன்படுத்தும் போது மாணவர்கள் பிசிராந்தையார் நாடகத்தின் கதைப்பின்னலை பார்த்தல் (VISUAL) , கேட்டல் (AUDITORY) , படித்தல்/எழுதுதல் (READING / WRITING) மற்றும் இயக்கவியல் (KINESTHETIC) கற்பிக்கும் போது புரிதல் மேம்படும். மேலும், மாணவர்கள் ஆர்வத்துடன் இந்த கதைப்பின்னலைக் கற்றுக் கொண்டனர். இதன் வழி மாணவர்களுக்கு கேட்டல் திறன் வளர்ந்தன. (சித்ரகலா கலைச்செல்வன், 2018)

**1.3 ஆய்வு நோக்கம்**

(i) பிசிராந்தையார் நாடகத்தின் கதைப்பின்னலைக் கற்பிப்பதில் மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கண்டறிதல்.

(ii) பிசிராந்தையார் நாடகத்தின் கதைப்பின்னல் கற்பித்தலை 'Multimodal' அணுகுமுறை வழி மேம்படுத்துதல்.

**1.4 ஆய்வு வினா**

(i) நான்காம் படிவ மாணவர்கள் பிசிராந்தையார் நாடகத்தின் கதைப்பின்னலை கற்பிப்பதில் எவ்வாறான சிக்கலை எதிர்நோக்குகிறார்கள்?

(ii) நான்காம் படிவ மாணவர்களின் எதிர்நோக்கும் சிக்கலுக்கான காரணங்கள் யாவை?



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.5 ஆய்வு நன்மைகள்

'Multimodal' அணுகுமுறையின் வழி படிவம் நான்கு மாணவர்களின் இடையே பிசிராந்தையார் நாடகத்தின் வழி கதைப்பின்னலை எழுதும் திறனை மேம்படுத்துதல் என்ற தலைப்பிலான இந்த ஆய்வு இடம்பெற்றன. கல்வியியல் துறையில் இருப்போர் இந்த ஆய்வுகள் பலவற்றை மேற்கொள்வதன் வழி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நன்மையாக அமைந்தன.

### 1.5.1 மாணவர்கள்

இந்த ஆய்வின் வழி படிவம் நான்கு மாணவர்களுக்குப் பிசிராந்தையார் நாடகத்தின் கதைப்பின்னலை தேர்வின் போது எழுதுவதற்கு எளிமையாக அமைந்தன. 'Multimodal' அணுகுமுறையின் வழி மாணவர்கள் தங்களுடையப் பயத்தை விட்டொழித்துக் கதைப்பின்னலைத் தேர்வில் எழுதினர். இந்த 'Multimodal' அணுகுமுறை மாணவர்களைக் கதைப்பின்னலை எழுதுவதற்கு உற்சாகம் படுத்தின. காரணம் இதில் நான்கு கூறுகள் அடங்கியிருக்கின்றன. அவை பார்த்தல், கேட்டல், விளையாடுதல், எழுதுதல் ஆகும். இதனை மாணவர்களை செயல்படுத்தும் போது கதைப்பின்னலின் புரிதலை நன்கு இவர்களிடையே மேம்படுத்த முடிந்தது. அவ்வகையில் இந்த ஆய்வு படிவம் நான்கு மாணவர்களுக்கு நன்மை அளித்தன.



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.5.2 ஆசிரியர்கள்

இந்த ஆய்வின் வழி இடைநிலைப்பள்ளி ஆசிரியர்கள் பல நன்மை அடைகின்றனர். இந்த ஆய்வில் பயன்படுத்தப்படும் 'MULTIMODAL' அணுகுமுறையைக் கொண்டு கதைப்பின்னலை எழுதுவதற்கு பின்தங்கியிருக்கும் மாணவர்கள், பிழையின்றி எழுதும் திறனை மேம்படுத்த முடிந்தன. மேலும், மாணவர்களின் தரத்திற்கு ஏற்ப இந்த ஆய்வு அமைந்திருக்கும். இந்த அணுகுமுறையை வகுப்பில் அமலாக்க படுத்த முடிந்தது. பெரும்பாலும் மாணவர்கள் ஒன்றைக் கஷ்டப்பட்டு மனனம் செய்து எழுதுவதற்குச் சிரமத்தை எதிர்நோக்குவர். அதுவே பிசிராந்தையார் நாடகத்தின் கதைப்பின்னலை 'Multimodal' எனும் அணுகுமுறையைப் பயன்படுத்தி காட்சியாகவோ, கேட்கும் திறனை மற்றும் விளையாட்டு முறையைப் பயன்படுத்தியப் பின் இறுதியில் அவர்களை எழுத வைக்கும் போது மாணவர்களிடையே எழுதும் திறனை மேம்படுத்த முடிந்தது. ஆகையால், இந்த ஆய்வு இடைநிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு நன்மை தருகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.6 ஆய்வு எல்லை

இவ்வாய்வு, பேராக் மாநிலத்திலுள்ள இடைநிலைப்பள்ளியான ஊத்தான் மெலிந்தாங் பள்ளியில் நடத்தப்பட்டது. இவ்வாய்வுக்கு நான்காம் படிவ மாணவர்களை மட்டுமே பயன்படுத்திக் கொண்டேன். இவர்களுக்கு வயது 16 ஆகும். இவ்வாய்வுக்கு மொத்தம் 18 மாணவர்களை உட்படுத்தி உள்ளேன். 'கூகள் போம்' (GOOGLE FORM) மூலம் இவர்கள் பிசிராந்தையார் நாடகத்தின் கதைப்பின்னலை



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எழுதுவதற்குச் சிரமத்தை எதிர்நோக்குகிறார்கள் என்று பதிவுச் செய்துள்ளனர். மேலும், இவர்களின் இலக்கியப் பாடத்தின் ஆசிரியரும் இதனைக் குறிப்பிட்டு உள்ளனர்.

படிவம் நான்கு மாணவர்களின் மொழித் திறன்களில் ஒன்றான கேட்டல் பேச்சு திறன், எழுத்துத் திறன் உட்படுத்தி செய்யப்பட்டுள்ளது. அதோடு, இந்த ஆய்வில், 2.6 கதைப்பின்னலை விவரிப்பர் என்ற உள்ளடக்கத்தரமும், 2.6.1 நாடகத்தின் தொடகத்தை விவரிப்பர், 2.6.2 நாடகத்தின் வளர்ச்சியை விவரிப்பர், 2.6.3 நாடகத்தின் சிக்கலை விவரிப்பர், 2.6.4 நாடகத்தின் உச்சத்தை விவரிப்பர், 2.6.5 நாடகத்தின் சிக்கல் விவரிப்பர், 2.6.6 நாடகத்தின் முடிவை விவரிப்பர்; கருத்துரைப்பர். கடந்த கற்றல் கற்பித்தலில் மாணவர்கள் சிக்கலை எதிர்நோக்கிய பகுதி திறன்களாக அமைவதால், இவை இந்த ஆய்விற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**1.7 ஆய்வு சான்றாதாரம்**

மாணவர்களிடையே இந்த ஆய்வுச் சான்றாதாரம் மேற்கொள்ளப்பட்டு இவ்வாயின் தரவுகள் பகுப்பாயப்பட்டன. ஆகவே, இவ்வாய்வின் சான்றாதாரங்களுக்கு ஆய்வாளர் முக்கியத்துவம் கொடுத்துள்ளார். அதோடு, இவ்வாய்வில் இச்சான்றாதாரங்களை முதன்மைச் சான்றாதாரங்களைக் கொண்டே ஆய்வாளர் தரவுப் பகுப்பாய்வு செய்வதோடு இவ்வாய்வினது ஆய்வுக் கண்டுப்பிடிப்பினைக் கண்டுப்பிடித்தார்.



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.7.1 முதன்மைச் சான்றாதாரம்

இந்த ஆய்விற்கான முதன்மைச் சான்றாதாரம் ஆய்வுக்காக நடத்தப்படும் முன்னறித் தேர்வு, பின்னறித் தேர்வுப் புள்ளிகள் வழியாகத் திரட்டப்பட்டன. இச்சான்றாதாரங்களைக் கொண்டு ஆய்வாளர் தரவுப் பகுப்பாய்வு செய்து இவ்வாய்வினான ஆய்வுக் கண்டுப்பிடிப்புப் பிசிராந்தையார் நாடகத்தில் அமைத்தார்.

### 1.7.2 துணைமைச் சான்றாதாரம்

இவ்வாய்விற்கான துணைமைச் சான்றாதாரம் ஆய்வாளர் மேற்கொண்ட இவ்வாய்விற்க்குத் துணையாகப் பயன்படுத்தப்படும் ஆய்வுக் கட்டுரைகள், ஆய்விதழ்கள், ஆய்வடங்கல்கள், நூல்கள், கல்வி, அமைச்சு ஆவணங்கள் போன்றவை இடம்பெற்றுள்ளன. இச்சான்றாதாராங்கள் யாவும் ஆய்வாளர் தனது ஆய்வினை மேற்கொள்ள உதவிப்புரியும். இவ்வாவணங்கள் வழிகாட்டியாக அமைந்து, இவ்வாய்வினை மேற்கொள்ளப் பயன்படுத்தப்பட்டன.

## 1.8 கலைச்சொற்கள் விளக்கம்

இவ்வாய்வானது, 'Multimodal' அணுகுமுறை வழி பிசிராந்தையார் நாடகத்தின் கதைப்பின்னலை கற்பித்தலில் மேம்படுத்துதல் எனும் தலைப்பில் ஆராயப்பட்டுள்ளதால் 'MULTIMODAL' அணுகுமுறை என்ற கலைச்சொல்லும், நாடகக் கதைப்பின்னல் என்றால் என்ன எனும் கலைச்சொல்லும், பிசிராந்தையார் நாடகம் கதைச் சொல்லையும் ADDIE கோட்பாடு கலைச்சொல்லும் இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.8.1 நாடகக் கதைப்பின்னல்

கதைப்பின்னல் என்பது ஒரே கதையின் வித்தியாசமான பாகங்களை அல்லது நிகழ்ச்சிகளை நெய்தி, அவற்றை கச்சிதமாக இணைத்துச் சொல்லும் முறையை குறிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. கதைக்கோப்பு என்றும் கதைப்பின்னல் என்றும் இதனைக் கூறலாம். கதைப்பின்னல் பின்னப்படும் தன்மையில் இருந்துதான் நாடகத்தின் வெற்றி முடிவு செய்யப்படுகிறது. கதை மிகச் சரியாகப் பின்னப்பட்டுவிட்டால் நிலைத்து நிற்கும் நாவலாக விளங்கும். ஆங்கில அகராதியில் 'Plot' என்ற சொல்லுக்கு நாடகம், கவிதை, நாவல் ஆகியவற்றிற்கான திட்டம் என்று கூறும் [20]. எனவே கதைத் திட்டம்தான் கதைக் கோப்பாக, கதைப் பின்னலாக அமைகிறது. இந்தக் கதைப்பின்னலின் வழி பிசிராந்தையார் நாடகத்தைச் சுருக்கமாக மாணவர்களால் படிக்க இயலும். குறிப்பாக, இலக்கியத்தில் "கதைப்பின்னல்" மிகவும் முக்கியமானது, ஏனெனில் இது கதையை பன்முகத்தன்மையுடன் மற்றும் சுவாரஸ்யமாக உருவாக்க உதவுகிறது. இந்தக் கதைப்பின்னலை ஆறு வகையானக் கூறாகப் பிரிக்கின்றனர். அவை தொடக்கம், வளர்ச்சி, சிக்கல், உச்சம், சிக்கல் அவிழ்ப்பு, முடிவு. இந்தக் கதைப்பின்னல் கதைகள் மாணவர்களின் கற்பனை மற்றும் படைப்பாற்றலைத் தூண்டுகின்றன, இது அவர்களை புதிய யோசனைகளை உருவாக்கவும், வித்தியாசமாக சிந்திக்கவும் ஊக்குவிக்கிறது. இந்த கதைப்பின்னலை மாணவர்கள் நன்கு உய்த்துணர்ந்து படிக்கும் போது மாணவர்கள் சொந்த கதைகளை உருவாக்கவும், தங்கள் சொந்த படைப்பு வெளிப்பாட்டை ஆராயவும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வாய்ப்பளிக்கின்றன. கதைகள் மாணவர்களுக்கு பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் பார்வைகளைப் பற்றி அறிய வாய்ப்பளிக்கின்றன, இது அவர்களின் படைப்பு சிந்தனையை வளர்க்க உதவுகிறது.

### 1.8.2 'Multimodal' அணுகுமுறை (MULTIMODAL METHOD LEARNING)

'MULTI' எனப்படுவது பல வகையான எனும் பொருளைக் குறிக்கிறது. பன்முக வழி கற்றல் (Multimodal Method Learning) என்பது கற்பித்தல் மற்றும் கற்றல் முறையில் புதிய அணுகுமுறையாகும். இது பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி கற்றலை மேம்படுத்துகிறது. 'மைல்டிமோடல்' கற்றல் என்பது VARK மாதிரியில் அடிப்படையாக உள்ளது. இது தனிநபர்கள் எவ்வாறு கற்றுக்கொள்கிறார்கள் மற்றும் தகவலை நினைவில் வைத்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள உதவுகிறது. VARK என்பதை நான்குக் கூறுகளைக் கொண்டுள்ளது. அவை பார்த்தல் (VISUAL) , கேட்டல் (AUDITORY) , படித்தல்/எழுதுதல் (READING / WRITING) மற்றும் இயக்கவியல் (KINESTHETIC) ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இந்த பார்த்ததில் (VISUAL), கருத்துகளைக் காட்சிப் படங்கள் ஆகவோ அல்லது நகர்படக் காட்சியாகவோ காண்பிக்கப்பட்டன. பின், கேட்டல் (AUDITORY) மூலம் கருத்துகளை ஒலிப்பதிவுப் பயன்படுத்திக் கேட்க வைத்தார். படித்தல்/எழுதுதல் (READING / WRITING) மூலம் பார்த்தக் காட்சிக் கருத்துகளையும் காதில் கேட்டக் கருத்துகளையும் நினைவுக்கூர்ந்து எழுதினர்.



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இறுதியாக, இயக்கவியல் (KINESTHETIC) என்பது களப்பயிற்சிகள், நாடகங்கள், கூட்டு செயல்பாடுகள் போன்றவையாகும். [1]

### 1.8.3 பிசிராந்தையார் நாடகம்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதிய "பிசிராந்தையார்" நாடகம் புகழ்பெற்றது. இந்நாடகம் சாகித்திய அகாடமி விருதைப் பெற்றது. கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் இடையேயான நட்பை மையமாகக் கொண்டது. ஒரு நாட்டில் தீயவர்கள் இருப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் கருத்தை முன்வைக்கிறது. பிசிராந்தையார் சங்ககாலப் புலவர்களில் ஒருவர். இவரது ஆறு பாடல்கள் சங்க இலக்கிய தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. "ஆந்தையார்" என்ற இயற்பெயரைக் கொண்டிருந்தார். பாண்டிய நாட்டிலுள்ள "பிசிர்" என்ற ஊரைச் சேர்ந்தவர். சோழ மன்னன் கோப்பெருஞ்சோழன், பாண்டியன் அறிவுடைநம்பி ஆகியோரைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

இந்த நாடகம், ஒரு நாட்டில் தீமையே நிகழவில்லை என்றால், அந்நாட்டு மக்களால் திடீரென்று அயலாரால் நிகழும் தீமையை எதிர்க்க முடியாது; திடீரென்று ஏற்படும் இயற்கைச் சீற்றங்களைத் தாங்கவும், அவற்றைப் போக்கவும் வலிமை இல்லாமல் போய் விடுகிறது என்பதையும் வலியுறுத்துகிறது. எனவே, ஒரு நாட்டில் தீயவர்களும் சிலர் இருக்க வேண்டும்; அப்போதுதான் மக்கள் தங்கள் வலிமையை வளர்த்துக் கொள்வார்கள் என்ற மாறுபட்ட கருத்தையும் இந்த நாடகம் முன்வைக்கிறது.



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும், பிசிராந்தையார் தன்னுடைய பாடல்களில் சமூக நிலை, அரசியல், போர் போன்ற பல்வேறு தலைப்புகளைக் கையாண்டுள்ளார். கோப்பெருஞ்சோழனுடன் அவருக்கு இருந்த நட்பு, தமிழ் இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்றது. பாரதிதாசனின் நாடகம், பிசிராந்தையாரின் வாழ்க்கை மற்றும் கொள்கைகளை பற்றிய ஒரு அற்புதமான சித்தரிப்பை வழங்குகிறது. [20]

### 1.8.4 ADDIE கோட்பாடு

ADDIE கோட்பாடு என்பது ஐந்து பிரிவுகள் உள்ளன. ஆய்வு (Analyze), திட்டமிடல் (Design), உருவாக்குதல் (Development), செயல்படுத்துதல் (Implement), மதிப்பீடு (Evaluation). இந்தக் கோட்பாட்டின் வழியின் மூலம் இறுதி கட்டத்தில் கவனம் செலுத்த முடிகிறது. மாணவர்களின் பாடத்தை மதிப்பீடுச் செய்வதற்கு இந்தக் கோட்பாடுத் துணைப்புரிகிறது. ஒரு திட்டத்தை ஒரு ஆய்வாளர் செயல்படுத்த வேண்டும் என்றால் இந்த கோட்பாட்டைப் பயன்படுத்தலாம். ஆய்வாளர் ஏதேனும் புதிய நடவடிக்கைகளைத் திட்டமிட்டுச் சரிவர செயல்படுத்துவதற்கு இந்தக் கோட்பாடுத் துணைப்புரிந்தன.

## 1.9 தொகுப்புரை

இயல் ஒன்றான இவற்றுள் ஆய்வின் அறிமுகத்தை ஆய்வாளர் விளக்கியுள்ளார். ஆய்வுப் பிண்ணனியில் ஆய்வாளர், மாணவர்களுக்கு நாடகத்தைக் கற்பிப்பதால் ஏற்படும் நன்மைகளை விளக்கியுள்ளார். இந்த ஆய்விற்கு இரண்டு நோக்கமும், இரண்டு ஆய்வு வினாகளையும், ஆய்வுச் சிக்கல்களையும் விளக்கியுள்ளார். இவ்வாய்வின் வழி மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் நன்மைகள் அடையுள்ளனர்



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

என்பதையும் ஆய்வாளர் விளக்கியுள்ளார். மாணவர்களின் பிசிராந்தையார் நாடகத்தின் கதைப்பின்னலை ‘MULTIMODAL’ அணுகுமுறை வழி புரிந்து கொள்வர். மேலும் ஆய்வாளர்பேராக் மாநிலத்திலுள்ள இடைநிலைப்பள்ளியான ஊத்தான் மெலிந்தாங் பள்ளியில் நடத்தப்பட்டன. தொடர்ந்து, ஆய்வாளர் ‘Multimodal’ அணுகுமுறைப் பற்றியும் விள்ளகமளித்துள்ளார்.